2016 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

தனி ஊராட்சி

***37899—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தினை தனி ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு”

என்ற வள்ளுவனின் குறளுக்கேற்ப, நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, நாளும்

நல்ல பல திட்டங்களைத் தருகின்ற தருமத் தாயே, 2016-ல் நடைபெறவிருக்கும் தேர்தலில் எத்தனை தலைவர்கள் வாக்குகள் கேட்டு வந்தாலும், 234 தொகுதிகளிலும் ஈடில்லா வெற்றியைத் தருபவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாண்புமிகு முதல்வர் அம்மாதான் என நாட்டு மக்களால் நாளும் பேசப்படுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமம், சுமார் 1,400 வாக்காளர்களைக் கொண்டது. கீழக்குப்பம், நடுக்குப்பம், வல்லம், காட்டுப்பாளையம், மேலிருப்பு போன்ற 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய மேட்டுக்குப்பம் கிராமத்தைத் தனி ஊராட்சியாகப் பிரித்துக் கொடுத்தால், அந்த மக்களுக்கு உரிய நிவாரணங்கள் மற்றும் அரசுமூலமாக அந்தக் கிராமத்திற்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்கும் என்கின்ற காரணத்தினால், அந்த ஊராட்சியைப் பிரித்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

அடுத்து, நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், எஸ். ஏரிப்பாளையம் கிராமம், சுமார் 1,000-க்கும் மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்டது. சிறுவத்தூர் மற்றும் சேமக்கோட்டை ஊராட்சிகளைக்கொண்ட ஏரிப்பாளையம் கிராமத்தைத் தனி ஊராட்சியாகப் பிரிப்பதற்காக அனைத்து ஆவணங்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் எங்களுடைய மாவட்ட அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அந்தக் கிராமத்திற்குச் சென்றபோது, அந்தக் கிராமத்து மக்கள், 'எங்கள் ஊராட்சியைத் தனி ஊராட்சியாகப் பிரித்துத் தர வேண்டும்' என்று அழுத்தமாகக் கோரிக்கை வைத்தார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, எதிர்வருகின்ற காலத்தில், இந்த இரண்டு கிராமங்களையும் தனி ஊராட்சியாகப் பிரித்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2016 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துதல், பிரித்தல், சேர்த்தல் தொடர்பான நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரித்தல், தரம் உயர்த்துதல், சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்மூலமாக தீர்மானம் இயற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இதுகுறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரால் கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர் பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் போன்றோரின் கருத்துகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையுடன் அரசிற்கு அனுப்பி வைக்கப்படும். அதன்மீது, அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், மேட்டுக்குப்பம் கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், நெய்வேலி தொகுதியில் உள்ள மற்றொரு ஒன்றியத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுகுறித்து எந்தக் கருத்துருவும் அரசிற்கு வரவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.